பக்கங்கள் : 4 விலை ரூபா 5.00

ஐக்கியதீபம்

திங்கள் AIKIYATHEEPAM. இதழ்

திபம் : 46 சித்திரை 1997 ஒளி : 20

Asst. Librarian PERIODICALS DIVISION

அன்புடமை

★ அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார் மறத்திற்கும் அஃதே துணை. 76

★ என்பிலதனை வெயில்போலக் காயுமே அன்பி லதனை அறம் 77

★ அன்பகத்தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண் வற்றல் மரந்தளிர்த்தற்றே 78

★ புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை அகத்துறுப்பு அன்பிலவர்க்கு 79

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம், இலக்கம் 111, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

★ பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்

உள்ளூர் மூலவளங்களைத் திரட்டி

கைத்தொழில் பேட்டைகளை நிறுவவேண்டும்

— புத்தாண்டுச் செய்தியில் கூ. அ. உ. ஆணையாளர் —

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நிவாரணப் பொருட்களை மட்டும் பங்கீட்டு அடிப்படையில் மக்களுக்கு விநியோகிக்கும் நிலையங்களாக மட்டும் இருந்து விடாமல் தங்கள் பிரதேசங்களில் உள்ள மூலவளங்களைத்திரட்டி கைத்தொழில் பேட்டைகளை ஆரம்பிக்க வேண்டும். இதுவே எமது மக்களின் இன்றைய தேவையாகும்

யாழ் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எஸ். கே சண்முகநாதன் கூட்டுறவாளர்களுக்கு விடுத்த புத்தாண்டு செய்தியில் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் தனது புத்தாண்டு செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது.

மாறிவரும்சூழ்நிலைக்கேற்ப பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுடைய செயற்பாடுகளை மாற்றியமைக்க வேண்டும். புனர்வாழ்வு நிவாரணப்பொருட்களை பங்கீட்டு அடிப்படையில் விநியோகிப்பதை ஒரு சிறியசெயற்பாடாகக்கொண்டு அதனை சேவை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டுமேயொழிய இலாபநோக்கில் செயற்படக்கூடாது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கிராமிய மட்டத் தங்கள் பிரதேசங்களில் உள்ளமூலவளங்களைகிராமிய பொருளாதார அபிவிருத்தியை மையமாகக் கொண்டு இனங்கண்டு கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பித்து கைத்தொழில் பேட்டைகளை அமைக்க வேண்டும்.

இத்தகைய கைத்தொழில் பேட்டைகளை ஆரம்பித்து நடாத்தும் போதுகுடாநாட்டு மக்களின் தேவைக்குரிய பொருட்களை உற்பத்தி செய்வதுடன் குறைந்த விலையில் அவற்றை அவர்களுக்குக் கிடைக்கச் செய்ய முடியும்.

இதன்மூலம் பிரதேச மட்டத்தில் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வேலை வாய்ப்பை அளிப்பதுடன் சங்கங்களும் தங்களது நிதி நிலையை ஸ்திரப்படுத்திக் கொண்டு சங்கங்களை வளர்ச்சிப்பாதையில் இட்டு செல்ல முடியும்.

கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகம் மக்களிடம் இருப்பதையே கூட்டுறவுத் திணைக்களம் விரும்புகிறது. நெறியாளர்களை நியமனம்செய்வதை திணைக்களம் விரும்பவில்லை தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மட்டும் நியமனம் செய்வதுபற்றியபரிசீலக்கவேண்டியுள்ளது. என்று அச்செய்தியில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் மேலும் தெரிவித்துளார்.

யாழ். மக்களின் வாழ்க்கைத்தரம் உயர கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடவடிக்கை

குடாநாட்டு மக்களின் நாளாந்த வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் நோக்குடன் கூட்டுறவு அடிப்படையில் 30 முதல் 40 வரையிலான கருத்திட்டங்களை யாழ். மாவட்டம் பூராவும் பரவலாக ஆரம்பித்து அமுல் நடத்துவதற்குவடக்கு கிழக்கு மாகாணகூட்டுறவுஅபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இக் கருத்திட்டம் 5 லட்சம் ரூபா முதல் 10 லட்சம் ரூபா முதலீடு வரை குறுகியகாலத்திட்டமாகவும், 11 லட்சம் ரூபா முதல் 30 லட்சம்ரூபா முதலீடுவரை மத்தியகால திட்டமாகவும், 31லட்சம் ரூபாவுக்கு மேல் செய்யப்படும் முதலீடு நீண்ட காலத்திட்டமாகவும் வகுக்கப்பட்டுள்ளது.

மக்களின் புனர்வாழ்வு, மனையிடங்கள் புனரமைப்பு, பாதிக்கப்பட்டோர்மறுவாழ்வு சுயவேலை வாய்ப்பு, வருமான அதிகரிப்பு, சமூக நல வசதிகளை மேம்படுத்தல்கடன் வழங்கும் கூட்டுறவுக்கள் போன்றன இத்திட்டத்தில் முக்கியமாக சேர்க்கப்பட்டுள்ளன, இத்திட்டத்திற்கு மூன்னோடியாக கருத்திட்ட அறிக்கைதயாரிப்பதற்கு கூ.அ.உ ஆணையாளர் திரு. எஸ். கே சண்முகநாதன் தலைமையில் இம்மாதம் வேலைக்களம் ஒன்று நடாத்தப்பட்டது.

யாழ். மாவட்ட விவசாயச் உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் நடைபெற்ற இவ்வேலைக்களத்தில் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள், இரண்டாம் படிக் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட மட்ட கூட்டுறவுச் சங்கங்கள், கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தச்சுத்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்கள். கைத்தொழில் கூ சங்கங்கள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், வைத்தியசாலை கூட்டுறவுச் சல்கங்கள், சித்தன சங்கங்கள், ப. தெ. வ. அ. கூ. சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

இவ் வேலைக்களத்தில் வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்களத்தில் இருந்து கூ. அ. உ. ஆணையாளர் திரு பொ. சிவஞானம், திருமலை கூட்டுறவுக்கல்லூரி அதிபர் திரு. செ. கனகசபாபதி கூ. அபிவிருத்தி உதவி ஆணையாளர் [எண்பார்வை] திருமதி கோ. திருநாவுக்கரசு யாழ். செயலக மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. சண்முகநாதன், திட்டப் பணிப்பாளர் திரு. எஸ். பாலகிருஷ்ணன் கடற்றொழில் விரிவாக்க அலுவலர் திரு எஸ். ஏ. யேசேப், விவசாயப் பணிப்பாளர் திரு எஸ். சிவலோகநாதன், திரு. கா. பரந்நிருபசிங்கம், கூ அ உதவி ஆணையாளர் [பனை தென்னைவளம்] மற்றும் கூட்டுறவுப் பரிசோதகர்களும் கலந்துகொண்டார்.

புதுவருட வாழ்த்துக்கள்

கூட்டுறவாளர்கள், வாசக அன்பர்கள் எழுத்தாளர்கள், ஆதரவாளர்கள், அனைவருக்கும் எமது ஈசுர வருட சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

25 ஆண்டு கூட்டுறவு பணிக்கு சம்பளத்தில் 10 வீதம் மேலதிகம்

25 வருடங்களுக்கு மேலாக கூட்டுறவுச் சேவையில் பணிபுரிந்த ஊழியர்களுக்கு உச்சப்படிச் சம்பளத்தில் 10 வீதம் மேலதிக படியாக வழங்க அனுமதிக்கும் சுற்று நிருபம் ஒன்றை கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு - வடக்கு கிழக்கு மாகாணம் - வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

4-ம் பக்கம் பார்க்க

உணவுப் பொருள் கொள்வனவுக்கு மக். வங்கி 25 மில்லியன் ரூபா கடன்

யாழ். குடாநாட்டுமக்களின் டர் காமினி பொன்னாண்டோ அத்தியாவசிய உணவுப் பொருள் கொள்வனவுக்கு மக்கள் வங்கி 25 மில்லியன் ரூபாவை டல நோ. கூ. சங்கங்களுக்கு கடனாக வழங்கவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவின் விசேட பணிப்பின்கீழ் இக்கடன் வழங்கப்படுவதாக மக்கள் வங்கி தலைவர் டாக்டர் காமினி பொன்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் கொள்வனவுக்காக வழங்கப்படும் இத் தொகையை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 36 மாத காலத்துக்குள் 18% வட்டியுடன் திருப்பிச்செலுத்தவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ப. தெ. வ. அ. கூ. சங்கங்கள் வெள்ளிவிழா கொண்டாட ஏற்பாடு

யாழ், மாவட்டத்தில் உள்ள பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்தங்களது (இருபத்தைந்தாவதுவருட) வெள்ளிவிழாவை மேமாதம் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள்.

ப. தெ. வ. அ. கூட்டுறவுச் சங்கங்களின் வரலாற்று ரீதியான வளர்சியினை ஆவணப்படுத்தும் வகையில் இவ் வெள்ளிவிழாவைஒட்டி 'மலர்' ஒன்றும் வெளியிடுவதற்கு வெள்ளிவிழாக் குழுவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பல நோ. கூ. சங்கங்கள் புனரமைப்புவேலையில்ஈடுபட வேண்டும்

"நாம் இப்பொழுது புதிய காலகட்டத்திற்குச் சென்று கொண்டிருக்கிறோம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உணவு விநியோகத்தில் மட்டும் ஈடுபடாமல் புனரமைப்பு வேலைகளிலும் தம் தொழிற்பாடுகளை விரிவபடுத்த வேண்டும்"

(4ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அலுவலக முகாமைத்துவம்
OFFICE MANAGEMENT

க. தேவராசா
தலைவர் வணிகத்துறை, யாழ். பல்கலைகழகம்

எந்தவொரு அமைப்பிலும் முகாமைத்துவம் என்பது இன்று முக்கியத்துவம் பெற்று வருகின்றது. பொதுவாகவே நிறுவனங்களில் கிடைக்கும் அரிதான வளங்களைச் சிக்கனமாகப்பயன்படுத்திஅதன்நோக்கினை அடைந்து கொள்ள முயலும் கருமமாகவே முகாமைத்துவம் வரையறுக்கப்படுகின்றது. அலுவலகத்திலே மனிதவளம் என்பது ஊழியர்களையும் பௌதீகவளம் என்பது தட்டச்சு, தளபாடம், அலுவலக உபகரணம், கட்டிடம் ஆகியவற்றையும் குறித்து நிற்கும். இத்தகைய வளங்கள் அரிதானவை என்பதனால் அவற்றைச் சிக்கனமாகப் பயன்படுத்தி உச்சப் பயனைப் பெற அலுவலக முகாமைத்துவம் அவசியமாகின்றது.

அலுவலகங்களில் கடமை புரியும் ஊழியர்கள் அலுவலக முகாமைத்துவம் பற்றிய அறிவைக் கொண்டிருப்பது மிக அவசியமாகும். இதன் மூலம் ஒவ்வொரு ஊழியரும் வினைதிறமையுடன் தொழில் புரிய முடிவதுமட்டுமன்றி அலுவலகம் ஒழுங்காகசெயற்படுவதற்கும் அதனூடே நிறுவனத்தின் நோக்கம் இலகுவில் அடைந்து கொள்ளப்படுவதற்கும் முடியும் கூட்டுறவு அமைப்புகளும் தமதுநோக்கங்களை அடைந்து கொள்ள அலுவலகங்களை ஒழுங்காக நிர்வகிக்க வேண்டியிருப்பதனால் அங்கும் அலுவலக முகாமைத்துவம் முக்கியம் பெறுகின்றது.

அலுவலக நோக்கங்கள்

எந்தவொரு அலுவலகமும் நான்கு நோக்கங்களைக் கொண்டவையாக இயங்கமுடியும்

1. தகவல்களை ஏற்றுக் கொள்ளல்
2. தாவல்களைப் பதிவு செய்தல்
3. தகவல்களை ஒழுங்கு படுத்தலும் வழங்கலும்
4. சொத்துக்களைப் பாதுகாத்தல்

இதில் தகவல்களைத் திரட்டுதல் என்பது நிறுவனத்தின் செயற்பாடுகள் சம்பந்தமாக கிடைக்கும் தகவல்களைக் கடிதமூலமோ அன்றித் தொலைபேசி மூலமோ பெற்றுக்கொள்வதாகும். அதே நேரம் தகவல்களைப் பதிவு செய்தல் என்பது பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களை ஒழுங்கான முறையில் பதிவு செய்து தேவையேற்படும்பொழுது வழங்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். தகவல்களை ஒழுங்கு படுத்தலும் வழங்குதலும் என்பது வெவ்வேறு மூலங்களிலிருந்து திரட்டப்பட்ட தகவல்களை ஒழுங்கு படுத்தி எனனென்ன தேவைகளுக்குத் தகவல் தேவைப்படுகின்றதோ அதனை தேவைக்கேற்ப வழங்கக்கூடியதாக இருப்பதும் அலுவலகத்தின் கடமையாகும். இதேநேரம் அலுவலகத்தில் பெருமளவு சொத்துக்கள்காணப்படும்என்பதனால் அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு அலுவலக முகாமைத்துவத்தின் கடமையாகும். அலுவலகத்தில் இருக்கும் சொத்துக்கள் களவாடப்படாமல் அல்லது மேசடி செய்யப்படாமல் பாதுகாப்பளிக்கும் பொறுப்பு அலுவலக முகாமைத்துவத்தின் நோக்கமாகும். எனவேதான் அலுவலகமொன்றின் சீரான இயக்கம் அது பின்பற்றும் அலுவலக முகாமைத்துவத்தில் தங்கியுள்ளது.

கூட்டுறவுத்துறையும் சமூகமேம்பாடும்

மா. சின்னத்தம்பி
விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்

கூட்டுறவுத்துறை எல்லா சமூகங்களிலும் பிரிக்க முடியாத பொருளாதார அலகாக வலிமைமிக்க, பரந்துபட்ட, பல்நிலைப்பட்ட முறையில் வளர்ச்சி பெற்றுள்ளது. கூடியாமும் மிச் சிறந்த மனித விழுமியத்தின் பொருளாதாரக் கோலமாகவே தென்படுகின்றது. "எல்லோரும் முதலிடலாம். எல்லோரும் நிர்வாகம், முகாமைப் பணிகளில் ஈடுபடலாம். எல்லோரும் நலன்களைப் பங்கிடலாம். எல்லோரும் பொருளாதார வினைத்திறனைப் பெறலாம்" என்ற ஜனநாயக பொருளாதார இலட்சிய வடிவமாகவே கூட்டுறவுத்துறை வளர்ச்சி பெற்றுள்ளது. இத்துறை சமூக மேம்பாட்டிற்கு பல்வேறுபட்ட நிலைகளில் உதவுகின்றது. அவ்வாறான செயல் விளைவுகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பொருளாதாரபண்புடைய அமைப்பு ;

இலங்கை போன்ற நாடுகளில் தேசிய வளங்களை ஒன்றிணைத்து எல்லா மக்களினதும் தேவைக்கான பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்து விநியோகிக்கும் முயற்சியுடைமை முறைகள் பல உள்ளன. அவை:

1] தனியார்துறை முயற்சிகள்
2] அரசதுறை முயற்சிகள்
3] கூட்டுறவுத்துறை முயற்சிகள்

தனியார்துறை முயற்சிகள் உள்நாட்டு மூலதனம், முயற்சியாண்மை கொண்டவனவாகவோ, அவற்றை வெளிநாடுகளிலிருந்து பெறுவனவாகவோ, இரண்டும் இணைந்த கூட்டு அமைப்புக்களாகவோ காணப்படுகின்றன. இவை இலாபத்தை இயன்றளவு அதிகரிப்பதற்காக தம்பணிகளை விரிவுபடுத்தக்கூடிய தந்திரோபாயங்களிலேயே நாட்டம் உடையன. இலாபகரமான சந்தைகளைநோக்கியே இவை விரிவுபடும். வாங்கும்வல்லமை கொண்ட செல்வந்தர் இதில் மகிழ்ச்சியான வாழ்வு பெறுவர்.

அரசதுறை தனது வரவு செலவுத்திட்ட நிதிகளிலிருந்து முதலீடுசெய்து தேசிய வளங்கள்மீது தனக்குள்ள அரசியல் சட்டரீதியான அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களிடம் நன்மதிப்பைப் பெறும் வகையில் அவகளது வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் வகையில் பல்வேறு பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றது. அரசாங்கங்கள் மாறுதற்கேற்ப இவற்றின் அமைப்புமுறை, விரிவாக்கம் என்பவற்றிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

இத்தகைய துறைகளுக்குள் காணப்படும் பல்வேறு பண்ட உற்பத்தி, பங்கீடுபோன்ற பணிகளில் ஈடுபடும் முக்கியமான துறையே கூட்டுறவு ஆகும். அரச மேற்பார்வை, வழிகாட்டல்கள், உதவி என்பவற்றுடன் பொதுமக்கள் மூலதனத்தில் அவர்களுக்கான நலன்களை உண்மை அக்கறை கவனிக்கும் அமைப்பே கூட்டுறவுத்துறையாகும். இலாபத்திற்காகவன்றி சேவை மக்களின் நலமேம்பாட்டுக்காக செயற்படும் அமைப்பாகவே கூட்டுறவுத்துறை செயற்படுகின்றது. அது உழைக்கும் இலாபம்கூட மீண்டும் நலன்களைப் பங்கிடுவதற்கே பயன்படும் என்பது கவனிக்கத்தக்கது. இலாபம் அதன் நீண்டகாலஉறுதித்தன்மைக்கு அடிப்படையாக அமையும்போது நீண்டகாலத்தில் மக்கள் நலன்களைப் பாதுகாக்கும் என்பதும் வெளிப்படையாகின்றது

கூட்டுறவுத்துறையின் பொருளாதார முக்கியத்துவம்

கூட்டுறவுத்துறை பொருளாதாரத்தில் கொவனவுவலு குறைந்த மக்களுடன் நெருக்கமான தொடர்புடைய துறையாக விளங்குகின்றது. பொருளாதாரத்தில் விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் சேவைகள் போன்ற பலவற்றிலும் ஈடுபட்டு வருகின்றது இதன்மூலமாக பின்வரும் வழிகளில் பொருளாதார அபிவிருத்தியில் பங்கேற்று வருகின்றது.

1] பெரும் பகுதியான கிராமிய மூலவளங்களுக்கு ஏற்ற பயன்பாட்டை ஏறபடுத்துகின்றது ஏனைய துறைகளினால் கவனிக்கப்படாத மூலவளங்களுக்கு அதிக பயன்பாட்டை வழங்குகின்றது!

2] போட்டிமிக்க தொழிற் சந்தையினுள் நுழைய முடியாத கீழ்மட்ட ஊழியப் படையினருக்கான தொழில் வாய்ப்பை பிராந்திய மட்டங்களில் வழங்குவதன் மூலமாக மனித வளம் பயன்பாட்டை பூரணப்படுத்த உதவுகின்றது.

3] பெரும்பாலான சாதாரண மக்களின் பங்குப்பணத்தைத் திரட்டுவதன் மூலம் சாதாரண மக்களுக்கான முதலீட்டு உரிமையை வழங்கி வருகின்றது. இதன் மூலமாக வறிய மக்களிடம் சேமிப்பை ஊக்குவித்து வருகின்றது.

4] தேசிய நெருக்கடிகளின் போது பொருட்பங்கிட்டில் அக்கறையுடன், நியாயவிலைகளில் இயன்றளவு சமமான பங்கீட்டு முறைப்படி ஈடுபட்டு வருகின்றது. இயற்கை பாதிப்புக்கள், யுத்தம், பொருட்பற்றாக்குறை என்பன நிலவும் காலங்களில் ஏனைய துறைகளை விட இதுவே விநியோக முறையில் நேர்மையுடன் செயற்பட்டு மக்களுக்குச்சேவையாற்றுகின்றது

5] நாட்டில் நியாயவிலைக்கு அத்தியாவசியப் பண்டங்களை விநியோகிப்பதன் மூலமாக பணவீக்கத்தை கட்டுப்படுத்த உதவுகின்றது உண்மை விலை மட்டத்தை மக்கள் அறியும் வகையில் அதிகுறைந்த மட்டத்தை நிலை நிறுத்த முயல்கின்றது.

இவ்வாறு சமூக பொருளாதார ரீதியில் கூட்டுறவுத்துறை பிரிக்க முடியாத பங்களிப்பைச்செய்வதன்மூலமாக சமூக மேம்பாட்டுக்கு உதவும்

இலங்கை போன்ற வறிய நாட்டில் வறுமை தணிப்பு செயற்பாட்டில் இத்துறையின் பங்கு மகத்தானது.

கிராமிய மட்ட சிறிய, நடுத்தரக் கைத்தொழில்களின் அபிவிருத்திக்கு பங்காற்றுவதன் மூலமாக பொருத்தமான தொழில் நுட்ப அபிவிருத்திக்கும் உதவுகின்றது.

நாடுமுழுவதும் பரவலான வலையமைப்பைக் கொண்டதாக கூட்டுறவுத்துறை செயற்படுவதன் மூலமாக சமூக மேம்பாட்டுக்கு குறிப்பிடத்தக்க வகையில் பங்காற்றி வருகின்றது.

வளரும் புதிய துறைகளில் வினைத்திறனுடன் செயற்படுவதன் மூலம் சமூக நீதியுடன் அபிவிருத்திக்கு பங்காற்ற முடியுமென எதிர்பார்க்கலாம்

பெண்களுக்கு ஏற்படும் உளவியல் தாக்கங்களும் - தீர்வுகளும்

கோகிலா - மகேந்திரன்

"கண்ணீரின் ருசிகள் வேறானவை என்றாலும் எந்த மனதைத் தோண்டினாலும் துக்கத்தின் ஊற்றுக் கொப்பளிப்பதைப் பார்க்கலாம்" என்று சுந்தரராமசாமி என்ற எழுத்தாளர் தனது ஜே. ஜே. சிலகுறிப்புகள் என்ற நாவலில் சுட்டிக்காட்டுகிறார்.

உலகின் பல நாடுகள் போர் அரக்கனின் இறுக்கமான பிடியில் அகப்பட்டு விடுபட முடியாமல் தத்தளிக்கின்றன. அவற்றுள் எமது நாடும் ஒன்று என்பது சொல்லித்தெரிய வேண்டிய விடயமில்லை. போரின் அடிமூல வேராக இருக்கும் அதிகாரத் தேவை அல்லது அதிகார ஆளுமை பல ஆண்மனங்களில் ஊற்றெடுத்தாலும், போரின் விளைவுகள் மிக அதிக அளவில் பெண்களின் உளங்களையே தாக்குகின்றன என்பது கசப்பான யதார்த்தமாகும்.

1995-ம் ஆண்டு ஆகஸ்ட் மாத இறுதியில், சீனாவின் பெய்ஜிங் நகரில் நடைபெற்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் உலகப் பெண்கள் மகாநாட்டில் சுமார் 187 நாடுகளைச் சேர்ந்த 30,000 பெண்கள் கலந்துகொண்டு சமத்துவம், வளர்ச்சி, சமாதானம் ஆகிய மூன்று முக்கிய விடயங்களை ஆழமாக ஆராய்ந்தார்கள். 'உலகத்தை பெண்களின் கண்களுக்கூடாகப் பாருங்கள்' என்பதே அந்த மகாநாட்டின் குறிக்கோள் வாக்கியமாக இருந்தது. போரின் நாசத்தைப் பெருமளவு தரிசித்த - அண்மைக் காலத்தில் ஈராக் போன்ற நாட்டுப் பெண்கள் அதன் காரணங்கள், விளைவுகள், மாற்று வழிகள் பற்றி எல்லாம் மிக விரிவாக ஆராய்ந்தாரீகவி. அவற்றில் பல எமது நாட்டுக்கும் பொருந்துவதாகவே இருந்தன.

யுத்தம் எமது நாட்டுப் பெண்களுக்கும் கோரமான உளவியல் தாக்கங்களை ஏற்படுத்தியிருப்பது உண்மைதான். ஆனாலும் நாங்கள் "அதற்கென்ன செய்வது?" என்று கைகட்டி வாளாதிருக்க வேண்டியதில்லை. அதன் காரணகாரியங்களை முறைப்படி ஆராய்ந்து எம்மைக் கொஞ்சம் இறுக்கத்தில் இருந்து தளர்த்திக்கொள்ள முடியும்.

பெய்ஜிங் மகாநாட்டில் கலந்துகொண்ட பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் பூட்டோ சொன்னார். "பெண்கள் மிக நீண்ட யுகங்களாக மௌனமாக இருந்து விட்டார்கள்" ஆம் எங்கள் உள்ளங்களுக்கு மருந்து தேடவாவது நாங்கள் மௌனம் கலையத்தான் வேண்டும்.

"பெண்களே உங்களுடைய சக்தியும், உங்கள் எண்ணங்களும், உங்கள் கருத்துக்களும் காரியமாற்றும் திறனும், உலக நாடுகளின் அரசுகளின் கண்களைத்திறக்கச்செய்யும்" என்றார் கிலாரி கிளிங்ரன் எங்கள் சக்தியும் எங்கள் காரியமாற்றும் திறனும் எமக்கு ஏற்படும் உளவியல் தாக்கங்களில் இருந்து விடுதலை பெறவாவது எங்களுக்குப் பயன்பட முடியாதா?

உளத்தாக்கங்கள்

எமது நாட்டில் தற்போது நிலவுவது போன்ற ஒரு சூழலில் உயிர், உடைமை இழப்பு, இடப்பெயர்வு, அடிப்படைத் தேவைகள் மறுக்கப்படுதல், உயிர் அச்சுறுத்தல், மரண அழிவுச் சூழல், உடல் உளம் சார் வன்முறைகள், பாலியல் வன்முறைகள் பல்வேறுபட்ட மறைமுகமான தாக்கங்கள் போன்ற பல காரணங்களினால் பெண்கள் உளரீதியாக்கம் அடைகிறார்கள்.

மனித மரணம் ஒன்று சம்பவிக்கும் போது, பௌதீக ரீதியாக அதற்கு எவ்வளவு அண்மையில் ஒருவர் இருந்தார் என்பது அவர் பெறும்உளத் தாக்க வீதத்தை பாதிக்கும் முக்கிய காரணியாகின்றது, இறப்புக்கு மிக அண்மையில் இருந்து தானும் காயப்பட்டார் கடும் பாதிப்புக்கு உட்படுகிறார். காயம் இன்றித் தப்பிப் பிழைத்துக் கொண்டவர் சிறிதளவு குறைந்த பாதிப்பைப் பெறுகிறார் என்பது உண்மையே யாயினும் அப்பிரதேசத்தில் வாழ்ந்து, இச்சம்பவம் பற்றிக் கேள்விப்படுபவரும் ஏதோ ஒரு அளவில் பாதிக்கப்படவே செய்கிறார். ஆகவே யுத்தப் பிரதேசத்தில் வாழ்தல் என்ற நிலையே ஒரு தொடர் அழுத்தத்தை மனித மனங்களில் ஏற்படுத்துகிறது.

ஒரே சம்பவம் எல்லா மனிதர்களையும் ஒரே அளவு செறிவுடன் தாக்குவதில்லை என்பதும் கவனிக்கப்பட வேண்டிய விடயம், ஒரு மனிதனிடத்தில் காணப்படும் பரம்பரைக் காரணிகள், அவனது ஆளுமை, அவனது கடந்த கால அனுபவங்கள் அவனது மனப்பாங்கு, விழுமியங்கள், வயது, நம்பிக்கைகள் போன்ற பல விடயங்கள் இங்கு செல்வாக்குச் செலுத்தும். உதாரணமாகக் குழந்தைகள், கடவுள் நம்பிக்கை அற்றவர்கள் போன்

3-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதி 20: இதன் பிரயோகம் பற்றிய ஓர் ஆய்வு

கூட்டுறவுச் சங்கங்களில் பணிப்பாளர்களை பெயர் குறித்து நியமிப்பதற்கு சம்பந்தப்பட்ட சட்டங்களில் பல்வேறு வழிமுறைகள் பல்வேறு பிரிவுகளில் கூறப்பட்டுள்ளன.

அவையாவன,

I) 1973ம் ஆண்டின் கூட்டுறவுச் சங்க விதிகளின் பிரிவு 20ன் கீழ் நியமனம் செய்தல்.

II) கூட்டுறவுச் சட்டப்பிரிவு 60 அ[உ] ன் கீழ் முகாமைச் சபை ஒன்றை கூட்டுறவு பதிவாளர் நியமிப்பது

III) நேரடியாக கூட்டுறவுச் சட்டத்தின் பிரிவு 60 [இ] இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் ஆணையாளர் நியமனங்களை மேற்கொள்வது.

IV) பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட அவசரகால சட்டப் பிரமாணங்களுக்கமைய மூன்று அரசாங்க உத்தியோகத்தர்களைக் கொண்ட தகுதி வாய்ந்த அதிகார சபையை நியமிப்பது.

V) சம்பந்தப்பட்ட சங்கங்களின் துணை விதிகளில் பதிவாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பிரயோகித்து பணிப்பாளர் சபையை அல்லது பணிப்பாளர்களை நியமிப்பது.

அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நியமனங்களுள் அநேகமானவை 1973ம் ஆண்டின் கூட்டுறவுச் சங்க விதியின் பிரிவு 20ன் கீழ் செய்யப்பட்ட நியமனங்களாகும். விதி 20 ஆனது பணிப்பாளர் சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பில் நீண்டகாலமாக பரிச்சயமான ஒன்றாக இருந்து வந்தமையால் தற்போது எழுந்துள்ள சூழ்நிலைக்கும் விதி 20ஐ பிரயோகித்து பரிகாரம் காணுவதில் இயல்பாகவே கூடுதலான நாட்டம் காட்டப்பட்டது. இவ்விதி 20 ஆனது சூழ்நிலைக்கு எவ்வளவு தூரம் பொருத்தமானது என்பதும் சட்டத்தின் முன் எவ்வளவு தூரம் செல்லுபடியாகக் கூடியது என்பதும் ஆராயப்பட வேண்டிய இருமுக்கிய விடயங்களாகும்.

பணிப்பாளர் நியமனம் தொடர்பில் முதலில் தெளிவு படுத்திக்கொள்ள வேண்டிய முக்கிய அம்சம் ஒன்றுள்ளது அதாவது;

1) ஏற்கனவே செயற்பட்டுக் கொண்டிருக்கும், அல்லது அதிகாரத்திலிருக்கும் பணிப்பாளர் சபைக்கு மேலதிக உறுப்பினர்களை பெயர் குறித்து நியமித்துவிடுவதா?

அல்லது

I) புதிய பணிப்பாளர் சபை அல்லது முகாமைச் சபை ஒன்றையேபெயர்குறித்து நியமனம் செய்வதன்மூலம் உருவாக்கிக் கொள்வதா? என்பதே முதலில் தெளிவுபடுத்தப்படவேண்டியுள்ள விடயமாகும்.

விதி 20 பின்வருமாறு கூறுகின்றது "ஒரு பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் துணை விதிகளில் இதற்கு மாறாக வேறு எங்ஙன மாயிருப்பினும், அதன் நிருவாக சபைக்கு ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களை நியமிப்பதற்கும், அவர்களிடையே தலைவரை அல்லது உபதலைவரை அல்லது இருவரையும் நியமிப்பதற்கும் பதிவாளர் தத்துவம் உடையவராவார். இங்ஙனம் ஒரு தலைவரை அல்லது உப தலைவரை பதிவாளர் நியமிப்பாரயின் தெரிவு செய்யப்பட்ட தலைவர் அல்லது உப தலைவர் இதன் விளைவாக பதவி இழப்பர்"

இதிலிருந்து விதி 20ன் கீழான நியமனமானது ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டு இயங்கிக்கொண்டிருக்கும் அல்லது பதவியிலிருக்கும் பணிப்பாளர் சபைக்கு மேலதிகமாக உறுப்பினர்களை நியமிப்பதற்கு இடமளிக்கும் ஒரு பிரிவு என்பது புலனாகின்றது. அதாவது பணிப்பாளர் சபை ஒன்றை புதிதாக நியமனம் மூலம் உருவாக்கிக் கொள்வதற்கு விதி 20 பிரயோகிக்கப்படுவது பொருத்தமற்றது என்பதை இதிலிருந்து விளங்கிக் கொள்ளக்கூடியதாக உள்ளது. அண்மைக் கால நியமனங்களில் இந்நியதி பின்பற்றப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்படுவது ஆரோக்கியமானது.

விதி 20ன் சட்டத்தாற் பரியங்களின் அடிப்படையில் நோக்குமிடத்து, விதி 20ன் கீழ் நியமனம் ஒன்று செய்யப்படுமிடத்து அது, சம்பந்தப்பட்ட சங்கத்தின் பணிப்பாளர் சபைக்கூட்ட மொன்றுக்கான நிறைவெண்ணை எப்பொழுதும் அதிகரித்துக் கொண்டே செல்லும், அதாவது குறிப்பிட்ட சங்கத்தின் உபவிதிப்படி அமைக்கப்படக் கூடிய பணிப்பாளர் சபையின் மொத்த உறுப்பினர் தொகையுடன் விதி 20ன் கீழ் அச்சங்க பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் தொகையையும் கூட்டிய மொத்தத் தொகையில் அரைவாசிக்கு மேற்பட்ட உறுப்பினர்களின் இழிவுத் தொகை நிறை வெண்ணாகக் கருதப்படல் வேண்டும் உதாரணமாக ப.நோ.கூ. சங்க உபவிதி 63 பின்வருமாறு கூறுவது அவதானிக்கத்தக்கது "பணிப்பாளர் சபைக்கூட்டமொன்றில் எந்த விடயத்தைப் பற்றியும் முடிவு எடுப்பதற்கு உறுப்பினர் தொகையில் அரைவாசிக்கு மேற்பட்டோர் சமுகமளித்திருத்தல் வேண்டும்."

இதற்கமைய உபவிதிப்படி எழுவரை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு பணிப்பாளர் சபையில் எழுவரும் கூட்டத்துக்கு சமுகமளிக்க முடியாதுள்ள சந்தர்ப்பத்தில் குறைந்தது எண்மர் பெயர் குறித்து நியமிக்கப்பட்டு மொத்தமாக எண்மரும் கூட்டத்துக்கு சமுகமளிப்பது அவசியமாகும்.

அறுவர் கூட்டத்துக்கு சமுகமளிக்க முடியாதுள்ளவிடத்து குறைந்தது அறுவர் பெயர் குறித்து நியமிக்கப்பட்டால் பணிப்பாளர்சபைக் கூட்டமொன்றுக்கு ஏழுபேர் சமுகமளிப்பது இன்றியமையாததாகும். தெரிவுசெய்யப்பட்ட பணிப்பாளர் சபையில் ஐவர் சமுகமளிக்க முடியாதுள்ள இடத்து குறைந்தது நால்வர் பெயர் குறித்து நியமிக்கப்பட்டிருப்பின் குறைந்தது அறுவராவது கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும் தெரிவுசெய்யப்பட்ட பணிப்பாளர் சபையில் நால்வர் கூட்டத்துக்கு சமுகமளிக்கமுடியாதுள்ள இடத்து குறைந்தது இருவர் பெயர் குறித்து நியமிக்கப்பட்டிருப்பின் குறைந்தது ஐவராவது கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

இவ்வாறாக விதி 20ன் கீழும் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிப்பாளர் சபைகளைப் பொறுத்தவரை மேற்கண்டவாறு கூட்ட நிறைவெண் தொகை மிகவும் நுட்பமாக அவதானிக்கப்பட்டிருத்தல் அவசியம். கூட்ட நிறைவெண் தொடர்பான இவ் அம்சம் கவனிக்கப்படாது பொதுப்படையாக உபவிதிப்படி தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் சபையின் மொத்த உறுப்பின் தொகை ஏழுபேர் என்பதால் அச் சங்கத்தின் பணிப்பாளர் சபைக் கூட்டமொன்றுக்கான நிறைவெண் நிரந்தரமாகவே நான்காக இருக்கும் என எடுத்து, விதி 20ன் கீழ் இப்பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டவர்களின் தொகை இந்த 'நான்கு' என்ற நிறைவெண் அளவில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது எனக் கொள்ளப்பட்டு, விதி 20ன்கீழ் செய்யப்பட்ட நியமனமூலம் பணிப்பாளர் சபை ஒன்று மீள இயக்கப்பட்டிருப்பின், மேற்காட்டப்பட்ட முறையில் நிறைவெண் தொடர்பில் இச் சங்கத்தின் பணிப்பாளர்சபைக் கூட்டங்கள் அவற்றின் செல்லுபடியாகும் தன்மையை இழக்கக் கூடிய சந்தர்ப்பங்களும் எழ இடமுண்டு. விதி 20ன் கீழ் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சங்கத்தைப் பொறுத்தும் நிறைவெண் தொடர்பான இந்நிலைப்பாடு உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் என எதிர்பார்க்கலாம்.

செ. கனகசபாபதி

(வளரும்)

பெண்களுக்கு

2-ம் பக்க தொடர்ச்சி

றோரை இவ்விடயங்கள் கூடிய முனைப்புடன் தாக்குகின்றன.

இத்தாக்கங்களினால் சில உடன் விளைவுகளும் ஏற்படுகின்றன. நீண்டகால விளைவுகளும் உருவாகின்றன. இதயத்துடிப்பு வேகம் அதிகரித்தல் உடன் விளைவு என்று சொன்னால், மனச் சோர்வை ஒரு நீண்டகாலவிளைவு என்று குறிப்பிடலாம்.

பெண்களிடையே ஏற்படும் உளப்பிரச்சினைகளை மூன்று வகையாகப் பார்க்கலாம்.

I] உளமாய நோய்கள்

பரம்பரைக் காரணிகளில் பலவீனமான புள்ளிகள் இருப்பவர்கள் சூழலில் நெருக்கம் ஏற்படும்போது உளமாய நோய் நிலைக்கு மாறக்கூடும். தமக்கு நோய் இருப்பதை ஏற்றுக்கொள்ளாத இவர்களுக்குச் சரியான உள்ளுணர்வு இருக்க மாட்டாது. தமக்குள் ஒரு உலகைச் சிருஷ்டித்துக் கொண்டு, யதார்த்த நிலையை [illegible] நியமங்களை மீறும் இவர்களிடத்தில் காணப்படும் தர்க்கம், காரண காரியத் தொடர்பு ஆகிய விடயங்களில் குழப்பம் இருப்பதனால் இவர்களின் இயக்கப்பாடுகளை விளக்க முடியாது சீரான மனித உறவுகளைப் பேணுவதில் இவர்கள் கஷ்டப்படுவார்கள். இவர்களுக்கு மாயத் தோற்றங்கள் தென்படலாம். போலி நம்பிக்கைகள் தோன்றலாம். தம்மைக் கவனிப்பதைக் கூட ஒரு நிலையில் கைவிட்டு விடக் கூடிய இவர்களை உடனே ஒரு உள மருத்துவ நிபுணரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

2] உணர்ச்சிக் கோளாறுகள்:

உணர்ச்சிக்கோளாறுகளுக்கு உட்படும் பெண்களுக்குச் சரியான உள்ளுணர்வு இருக்கும். தமக்கு ஒரு நோய் அல்லது ஒர் உளப்பிரச்சனை அல்லது அசாதாரண உணர்வு இருப்பது அவர்களுக்குத் தெரியுமாதலால், சரியான வழிகாட்டல் இருந்தால் அவர்கள் பிரச்சினையை ஏற்றுக் கொண்டு தீர்வு காண விரும்புவார்கள். மரபுக்கு மீறிய பழக்க வழக்கங்களில் இவர்கள் திடீரென ஈடுபடக் கூடுமாயினும் சமுக நியமங்களை மீற மாட்டார்கள். வெளி உலகம் இவர்களுக்கு யதார்த்தமான தாதலின் இவர்களின் இயக்கத்தை விளங்கிக் கொள்ள முடியும் காரண காரியக் குழப்பம் இவர்களிடம் காணப்பட மாட்டாது. மனித உறவுகளை இவர்களால் பேண முடியும் தன்மை இவர்கள் கவனித்துக் கொள்வர் ஆனால் ஒரு சமநிலைக் குழப்பத்தில் இருப்பின் அச்சநோய் அதிதூண்டல் நிலை, இசிவு நோய், பதகளிப்பு நோய், மெய்ப்பாட்டு நோய், இறக்கம், நெருக்கீட்டுக்குப் பிற்பட்ட மனவடு நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களை இப்பிரிவில் அடக்கலாம்

3] வெறும் நோய் அறிகுறிகளை மட்டும் கொண்டவர்கள்

இனம் காணக்கூடிய நோய் எதுவும் இல்லாமல் நித்திரை வர மறுப்பதாய்ப் பல பெண்கள் சொல்கிறார்கள். நித்திரையில் அலறுதல், அமைதியற்ற நிலை, ஞாபகக் குறைவு, தடுமாற்றம், அடிக்கடி கோபம் வருதல், வையாவாதை உணர்வு போன்ற பல அறிகுறிகள் காணப்படக் கூடும்.

தீர்வுகள்:

இவற்றிலிருந்து நாங்கள் விடுபட வழியே இல்லையா? முற்றாக விடுபட முடியாவிட்டாலும் தாக்கங்களைப்பெருமளவு குறைத்துக் கொள்ள முடியும்.

காய்ச்சல் என்றால் உடனே நாங்கள் ஒரு மருந்துவரிடம் போவதில்லையா? அதேபோலவே எங்கள் உள்ளத்தில் ஒரு துன்பம் என்றால் நாங்கள் ஒரு உள மருத்துவரிடம் அல்லது உளவளத் துணையாளரிடம் போவோம். இதில் என்ன களங்கம்? எங்கள் துன்பம் மாற எங்கள் பிரச்சனை தீர அவர்கள் வழி காட்டுவார்கள்.

உளப் பிரச்சனைகள் தொடர்பான அறிவையும் விழிப்புணர்வையும் தேடிப் பெற்றுக்கொள்வோம். எமக்கு அருகில் உள்ள பொருள்களை அடிக்கவும் உடைக்கவும் உளம் உந்துகிறது என்றால் அதற்கும் எமது உளத் துன்பத்துக்கும் உள்ள தொடர்பை விளக்கி ஏற்றுக் கொள்வோம் எமது உணர்வுகளை உள்ளத்தின் ஆழத்தில் போட்டு புதைக்காது ஏற்றுக்கொள்ளப் படத்தக்க முறைகளில் வெளிப்படுத்துவோம். அழுதால் உன்னைப் பெறலாமே! என்றாம் அறிவோம் அல்லவா?

தனிமையும் மௌனமும் உள்ளத்தின் விரோதிகள்! உறவினர், நண்பருடன் கதைத்து உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வோம். குழந்தைகளுக்குக் கதைகள் சொல்வோம். எங்கள் புராணங்களிலும் இதிகாசங்களிலும் கதைகளுக்கா பஞ்சம்?

உறவினர், நண்பர்களின் ஆதரவு, அன்பு, உதவி ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வோம். கடவுளை நம்பி, அவரது உதவியை உறுதிப்படுத்திக் கொள்வோம்.

பிராணாயாமம், சாந்தியாசனம், மந்திர உச்சாடனம் தியானம் போன்ற சமயச் சடங்கு சார்ந்த புராதன வழிமுறைகளைப் பேணி வருவோம்.

சித்திரம், சங்கீதம், இலக்கியம், நாடகம், சிற்பம், போன்ற கலைகளில் மனம் ஒன்றி ஈடுபட்டு அவற்றின் மூலம் எமது உணர்வுகளை வெளிப்படுத்துவோம்.

போருக்கு முன், எமது வாழ்வு இயல்பாக இருந்தபோது நாம் செய்து வந்த சகல தொழிற்பாடுகளிலும் திரும்ப ஈடுபடுவோம். விளையாடுவோம்

ஓய்வு என்பது மனதின் எதிரி, உடல் ஓய்ந்திருக்கும் போது மனம் தேவையற்ற துன்பங்களில் ஆழ்ந்துபோகும் ஆகவே புதிய தொழில்களைக் கற்றுக் கொள்வதன் மூலமும் மற்றும் வேலைகளைச் செய்வதன் மூலமும் அதிக நேரம் ஓய்வாக இருப்பதைத் தவிர்த்துக் கொள்வோம்.

குடும்ப உறுப்பினர்கள் ஒன்றாக வாழ்வதுடன் மேலும் ஒத்த மனிதர்களுடன் இணைந்து கூட்டுத்தீர்மானங்களை எடுப்போம்.

நெருக்கீட்டுச் சூழல்களை முடிந்தவரை தவிர்க்கும் அதே வேளை செல்லப் பிராணிகளை வளர்த்து அவற்றின் மீது அன்பு காட்டுவோம்.

எல்லாவற்றிலும் மேலாக எமது வாழ்வின் அர்த்தத்தைச் சரியாகத் தேடி அந்த இலக்கை நோக்கித் திடமாக முன்னேறுவோம்.

கூட்டுறவாளர்களே!

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையினால் திங்கள்தோறும் பிரசுரிக்கப்படும் உங்கள் அபிமான பத்திரிகையான "ஐக்கிய தீபத்திற்கு" உங்கள் சங்கச் செய்திகள், செய்திக் கட்டுரைகள் மற்றும் கூட்டுறவு சம்பந்தமான கட்டுரைகள், துணுக்குகள் என்பவற்றை ஆசிரியர், ஐக்கிய தீபம், யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை 14, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

– ஆசிரியர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஐ. நா. அபிவிருத்தி திட்ட உதவியுடன் 41லட்ச ரூபா முதலீட்டில் பால்உற்.திட்டம்

ஐக்கியநாடுகள்அபிவிருத்தித் திட்டத்தின்உதவியுடன்யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் சுமார் 41 லட்ச ரூபா முதலீட்டுடன் யாழ் குடாநாட்டில் உற்பத்தி யாகும் பாலைப் பதனிட்டு பாலின் உப உற்பத்திகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள் ளது.

ஐ. நா. அ. திட்டத்தின் அனுசரணையுடன் இத்திட்டம் அமுல் செய்யப்படும் போது சுமார் 1500 பயனாளிடம் இருந்து 3 லட்சம் பாலைக் கொள்வனவு செய்து அதனைப் பதனிட்டு அதிலிருந்து தயிர், யோகட், பசும் பால்ரொபி, சுத்தமான பசு நெய், ஆடை நீக்கியபால் என்பன உற்பத்திசெய்து சந்தைப் படுத்துவதன்மூலம்நுகர்வோர் பெரும் பயனடைவதுடன் பலர்வேலை வாய்ப்பும் பெற முடியும்.

இதற்கான திட்ட அறிக்கை ஒன்று யாழ்ப்பாணம் கூ. அ. உ. ஆணையாளர் திரு. எஸ். கே. சண்முகநாதன் ஊடாக ஐ. நா. அ திட்ட அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கட்படவிருப்பதாக சங்கப் பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

★ விவசாய சமாசம்

புத்தாண்டையொட்டி நியாய விலையில் உணவுபொருள் விநியோகம்

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங் களின் சமாசம் புதுவருடத்தை முன்னிட்டு 4 கோடி ரூபா பெறுமதியான பொருட்களை மாகோ கப்பல்மூலம் எடுத்து வந்து தனது அங்கத்துவ சங் கங்களுக்கு நியாயவிலையில் விநியோகம் செய்துள்ளது.

சீனி, பயறு, சர்க்கரை, கற் கண்டு, புளி, பூடி, சிந்தாமணிக் கடலை, பால்மா வகைகள் சவர்க்கார வகைகள், கல்வனைஸ் வாளிவகைகள் மற்றும் விவசாய உபகரணங்கள் றொபின்நீர்இ இயந்திரங்கள் மரக்கறி விதைகள், கால் நடைத் தீவனங்கள் பின் னாக்கு, தவிடு, கோழித்தீன் வகைகள், மற்றும் புதுவருட டண்டிகையை முன்னிட்டு புடவை வகைகள் சியாஸ்ரா கைத்தொழில் கூட்டுறவுச் சங் கத்தின் தயாரிப்பான சியாஸ்ரா மெத்தைவகைகளே கப்பல்மூலம் எடுத்துவரப்பட்டு விநியோகம் செய்யப்பட்ட பொருட்களாகும்.

கூடுதல் இரசாயனப் பசளைப் பிரயோகம்

சூழலில் பாதகவிளைவுகளை ஏற்படுத்தும்

ஒரு குறிப்பிட்ட விளை நிலத்திலிருந்து கூடிய பயிர் உற்பத்தியைப் பெறுவதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய வெவ் வேறு தொழில்நுட்ப முறை களுள் பசளைப் பிரயோகமும் ஒன்றாகும். தாவரம் ஆரோக் கியமாக வளர்ந்து தரமுள்ள கூடிய விளைபொருட்களைத் தருவதற்கு இயற்கை பசளை யுடன் சிபார்சு செய்யப்பட்ட அளவில் இரசாயனப் பசளை யையும் உபயோகித்தல் அவ சியமானதாகும்.

ஆரம்ப காலத்தில் விவ சாயிகள் கூடியளவில் இயற் கைப் பசளைகளை மாத்தி ரம் பாவித்துப் பயிர்செய் தனர். சனத்தொகை அதி கரிக்கத் தொடங்க உணவுத் தேவையும் அதிகரித்தது. இத னால் பண்டைய விவசாய முறைகளைக் குறைத்து நவீன விவசாயத் தொழில்நுட்பங் களைப் பாவித்து அதிக உற்பத் தியைப் பெறுவதற்கு ஆரம் பித்தனர். இரசாயனப் பச ளைப் பிரயோகமும் நவீன விவசாயத் தொழில் நுட்பங் களில் ஒன்றாகும்.

விவசாயத் திணைக்களம் பயிர் உற்பத்தியை அதிகரிப் பதற்காக நைதரசன், பொஸ் பரஸ், பொட்டாசியம் போன்ற பிரதான மூலகங்கள் உள்ளடங்கலாக சமச்சீர்ப் பசளைப் பிரயோகத்தின் முக் கியத்துவத்தை முன்வைப்பது டன்வெவ்வேறு பயிர்களுக்குத் தேவையான இந்த இரசாய னப் பசளைகளையும், அவை கள் இடப்படவேண்டியகாலங் களையும் சிபார்சுசெய்து வந் துள்ளது. தொடர்ந்தும் சிபார்சுசெய்து வருகின்றது.

இரசாயனப் பசளையை உபயோகிக்க ஆரம்பித்த விவ சாயிகள் குறிப்பிட்ட சிபார்சு செய்யப்பட்ட அளவிற்கு அதி கமாகவும், சமச்சீர் அற்ற முறையிலும் பாவித்த தால் மண்ணும் நீரும் பயிர்களும் பாதிப்படைந்து வந்துள்ளன. தொடர்ந்தும் இந்த இரசாயன உரங்களைக் கூடுதலாக உபயோகிப்போமா னால் நம் இயற்கை வளங் கள் எல்லாம் பாதிப்படைந்து சூழலில் பாதகமான விளைவு கள் ஏற்படும் கூடுதலான இரசாயன உரங்களின் பாவனை பின்வரும் முறைக களில் தாக்கங்களை ஏற்படுத் துகின்றது.

★ பயிருக்கு ஏற்ற சமச்சீர்ப் பசளைப் பிரயோகம் செய்யா விடின் குறைவாக உள்ள மூல கம் பயிர் வளர்ச்சியக் கட் டுப்படுத்துவன்மூலம் உற்பத் தி ய குறைக்கின்றது

★ நைதரசன் பசளையைக் [அமோனியம் சல்பேற் அல் லது யூரியா] கூடுதலாகப் பாவித்தால் பயிர்களின் பதிய வளர்ச்சி கூடுதலாக நடை பெறுவதுடன், பீடை / நோய் களின் தாக்கங்களும் அதிகரிப் பதுடன் உற்பத்தியும் குறை

திரு ச சின்னத்துரை
உதவி விவசாயப் பணிப்பாளர் – பயிற்சி

கின்றது.

★ நைதரசன் பசளையை அளவுக்கு மேலதிகமாகப் பாவிக்கும்போது, மேலதிக பசளை நீரில் கரைந்து தரைக் கீழ் நீருடன் கலப்பதனால் குடிநீர் மாசடைகின்றது. நைதரேற் நச்சுத் தன்மை யால் புற்றுநோய் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

★ அமோனியம் சல்பேற் றைக் கூடுதலாகப் பாவிக்கும் போது நிலம் அமிலத்தன்மை யாக மாறுகின்றது.

★ நீர் வடிப்புத் தன்மை குறைவாக உள்ள உவர் நிலங் களில் கூடிய இரசாயனப் பச ளைகளைப் பாவிக்கும்போது உவர்தன்மை மேலும் அதிகரிக் கின்றது.

★ மண்ணை வளமாக வைத் திருக்க உதவிசெய்கின்ற மண் ணில் வாழுகின்ற பக்ரீரியா, பங்கஸ், அல்கா போன்ற நுண் ணங்கிகள் கூடிய இரசாயனப் பசளைப் பிரயோகத்தால் குறைக்கப்படுகின்றது, சிலவே ளைகளில் சாகடிக்கப்படுகின் றன.

★ மண்புழுக்கள் மண்ணை வளமாக்குகின்றன கூடிய இரசாயன உரப்பாவனை யால் இவைகளின் எண் ணிக்கை மிக குறைகின்றது.

மேற்குறிப்பிட்ட தாக்கங் களைக் குறைத்து பயிர் உற் பத்தியை அதிகரிக்கக் கடைப் பிடிக்க வேண்டிய வழிமுறை களாவன.

★ மண்வளத்தைப் பேணிப் பாதுகாத்துத் தொடர்ச்சி யாகப் பயிர்களிலிருந்து கூடிய உற்பத்தியைப் பெறுவதற்குக் கூடியளவில், இயற்கைப் பச ளைகளான எருவகைகள், கூட் டெரு, பசுந்தாட் பசளை போன்றவற்றை மண்ணுடன் சேர்த்தல் வேண்டும். ஒரு ஏக் கருக்கு 8-10 தொன் [20 வண் டில்] இயற்கைப் பசளையை வருடாவருடம் இடுதல் வேண் டும்.

★ சமச்சீர் இரசாயன உரப் பாவனையை மேற்கொள்ளு தல் வேண்டும்.

★ ஒருங்கிணைந்த பசளைப் பிரயோக முகாமைத்துவத்து டன், நீர் முகாமைத்துவத் தையும் கடைப் பிடித்தல் வேண்டும்.

ம. நோ. கூ சங்கங்கள்

1-ம் பக்கத் தொடர்ச்சி

யாழ். கூ. அ. உதவி ஆணை யாளர் திரு. எஸ். கே. சண் முகநாதன் தலைமையில் நடைபெற்ற கருத்திட்ட வேலைக் களத்தில் யாழ். செயலக திட்டமிடல் பணிப் பாளர் திரு. எஸ். பாலகிருஷ் ணன் மேற்கண்டவாறு கூறி னார்.

யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங் களின்சமாசத்தில் நடைபெற்ற கருத்திட்ட வேலைக்களத்தில் யாழ். மேலதிக அரசாங்க அதி பர் திரு. க. சண்முகநாதன் பேசுகையில், களஞ்சியப்படுத் தல், சந்தைப்படுத்தல் ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்டே கருத்திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

இர்மாதம் 30ம் திகதி நேர்முகப் பரீட்சை

கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர உயர்பிரிவு பயிற்சிநெறிக்கான நேர்முகப் பரீட்சை 30-4-97 புதன் கிழமை காலை 10-30மணிக்கு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கான விண்ணப்ப திகதி 25-4-97 வரை நீடிக்கப்பட்டுள்ளதாக வும் விண்ணப்பிக்க விருப்பும் கூட்டுறவுச் சங்கப் பணியாளரி களும் வெளிவாரி மாணவர் களும் கல்லூரி அதிபருடன் தொடர்புகொண்டு விண்ணப் பிக்குமாறும்,

கடந்த காலங்களில் கூட்டு றவுப் பணியாளர் தராதரப் பத்திர உயர், சாதாரண, கனிட்ட பிரிவு பயிற்சிபெற்று பரீட்சையில் சித்தியடையாத வர்கள் பழைய பாடத்திட்டத் தில் பரீட்சை நடாத்த ஏற் பாடுசெய்வதற்கு வசதியாக தங்கள் விபரங்களை 30-4-97க்கு முன் கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரி அதிபரிடம் சமர்ப்பிக்குமபடியும் மாவட் டச் செயலாளர் அறிவித்துள் ளார்.

10 பரப்பில் மூலிகைத் தோட்டம்

சித்தவைத்திய கூட்டுறவுச் சங்கம் இணுவில் பகுதியில் 10 பரப்பு காணியில் மூலிகைத் தோட்டம் அமைப்பதற்கான கருத்திட்ட அறிக்கை ஒன்றை யாழ் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. எஸ். கே சண்முகநாதன், திரு கா. பர நிருபசிங்கம் கூ அ உ ஆணை யாளர் [ப தெ வளம்] ஆகி யோரிடம் கையளித்துள்ளது

மூன்றுவருட காலத்துக்கு ஐந்துல-சத்து எண்பதாயிரம ரூபா மூலீட்டுடன் ஆரம்பிக் கப்படவுள்ள மூலிகைத் தோட்ட திட்டத்தின்கீழ் அறு பதுக்கு மேற்பட்ட மூலிகை கள் நாட்ட திட்டமிடப்பட் டுள்ளதென அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைப்பணிப் பொருட்காட்சி

அனைத்துலக பெண்கள் தினவிழாவும், கைப்பணிப் பொருட்கண்காட்சியும், யாழ் மாவட்ட கூட்டுறவு சபை மகளிர் குழுவினால் அண்மை யில் நடாத்தப்பட்டது.

யாழ். மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் இடம் பெற்ற இவ்விழாவிற்கு மாவட்ட மகளிர் குழுத் தலைவி திருமதி ரதி சோதி லிங்கம் தலைமை வகித்தார். பிரதம விருந்தினர்களாக திரு எஸ். கே. சண்முகநாதன் [யாழ். கூ. அ. உ ஆணை யாளர் திருமதி சோ திரு நாவுக்கரசு கூ அ உ ஆணை யாளர் [கணக்காய்வு] திரு. கா. பரநிருபசிங்கம் [கூ. அ உ. ஆணையாளர் [ப. தெ. [வளம் யாழ்ப்பாணம்] கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் யாழ். மா. கூ. சபைத் தலைவர் திரு தா. கந்தசாமி சிறப்பரையும் யாழ் பல்கலைக்கழக விரிவு ரையாளர் செல்வி மாதவி சுந்தரம் பிள்ளை விசேட உரையும் ஆற்றினார்கள் யாழ் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் கவிதை பாடினார்கள்.

இவ்விழாவின்போது குறு கிய கால மனைப்பொருளி யல் பயிற்சி பெற்ற 55 மாண விகளுக்கும் 1996 ஆண்டுயூலை மாதம் முதல் 1997 மார்ச் மாதம் வரை நடைபெற்ற மனைப்பொருளியல் டிப் ளோமா பயிற்சியில் பயிற்சி பெற்ற மாணவிகளுக்கும் திரு மதி சண்முகநாதன் சாந்த பவானி சான்றிதழ்கள் வழங் கினார்.

மாவட்டச் செயலாளர் திரு. சு. சிவசுப்பிரமணியம் நன்றி கூறினார்.

25 ஆண்டு கூட்டுறவுப் பணிக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

29 / 97 இலக்க அச்சுற்று நிருபத்தில் கூறப்பட்டிருப்பதாவது

கூட்டுறவுச் சங்கங்களில் 25 வருட காலமாக சேவை புரிந்து வருவோர் அநேகமாக தங்கள் சம்பள வீதத்தின் உச்சப்படியில் இருப்பதை அவதானிக்க முடிகிறது. அவர்க ளுக்கு வேறு உயர் பதவி வழங்கப்பட்டாலொழிய அவர்கள் கூடுதலான சம்பளம் பெற தகுதியற்றவர்களாவார்கள். உயர் பதவிகளில் அவற்றிடம் இல்லாவிடில் இவர்களுக்கு உயர் பதவி வழங்க முடியாத செயலாகும்

எனவே கூட்டுறவுச் சேவையில் 25 வருட சேவையினை பூர்த்தி செய்தவர்களுக்கு சங்க நிர்வாகத்தின் அனுமதியுடன் அவர்கள் எடுக்கும் சம்பள உச்சப்படியின் 10% இனையோ, அல்லது ரூபா 500/- இனையோ இதில் எது குறைவோ அதனை வழங்க இவ்வாணைக்குழுவினால் அனுமதி வழங்கப் படுகிறது.

யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவு மகளிர் கல்வி அபிவிருத்தி திட்டம் 1997

மனைப் பொருளியல் அடிப்படை பயிற்சி நெறிக்கான விண்ணப்பம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையால் நடாத் தப்பட இருக்கும் மனைப்பொருளியல் டிப்ளோமா பயிற் சிக்கு அடிப்படையாகவும் தற்போதைய சூழ்நிலையில் மக ளிர்களின் போக்குவரத்து வசதி கருதியும் உங்கள் பிரதேச மட்டங்களில் மேற்படி அடிப்படை மனைப் பொருளியல் பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது. இப்பயிற்சி நெறியில்,

தையல் ❋ கோலப்பயிற்சி ❋ தலை அலங்காரம் ❋ பூ வேலை ❋ ஜசிங் ❋ சிற்றுண்டி தயாரித்தல்

ஆகியன உள்ளடக்கப்படும்.

5 மாத காலம் கொண்ட மேற்படி பயிற்சிக்கு விண் ணப்பிக்கவிரும்புவோர் உங்கள் பகுதியிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங் கங்கள் ஒன்றில் விபரங்களைப்பெற்று 30 4-97 ற்கு முன் அங்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும்.

பதிவுக்கட்டணம் :- 100 ரூபா மட்டும்
பயிற்சி :- இலவசம்

இல. 14 மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். யா. மா- கூ- சபை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யா. மா. கூ. சபை அச்சகத்தில் அச்சிட்டு 14, மணிக்கூட்டுவீதி மா. கூ. சபையினரால் ஏப்பிரல்மாதம் வெளியிடப்பட்டது.